**தலைப்பு 114 – போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) போக்குவரத்து மற்றும் சிவில் சேவைகள் அமைச்சினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச்சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 28 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தி | திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்காத எந்தவொரு பொறுப்புக்களும் 2019 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட மாட்டாது. எனினும், மீளாய்வாண்டில் அந்த முறையில் ளு திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்காத ரூபா 6,455,487 பெறுமதியான பொறுப்புக்கள் 2019 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். | 2018 திசெம்பர் 31 இற்கு முன்னர் ஏற்பாடுகளை மேற்கொள்ளாமையால் சிகாஸ்னுள் அனைத்து பொறுப்புக்களையும் பதிவு செய்ய முடிந்திருக்கவில்லை. |
| (ஆ) | 2016 மார்ச் 21 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | | | |
| (i) | சுற்றறிக்கையின் 2.1.2 ஆம் பந்தி | கொழும்பு புறநகர் செயற்திட்டத்தின் பெறுமதியானது அமைச்சரவையின் அங்கீகாரத்தை பின்பற்றி அதிகரிக்கப்பட்டதுடன் அதற்கிணங்க | செயற்திட்ட அறிக்கை அல்லது மதிப்பீட்டறிக்கை அதற்கிணங்க இருக்க வேண்டும். | செயற்திட்டத்தின் பெறுமதியை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்திட்டத்தின் மதிப்பீட்டு அறிக்கையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | சுற்றறிக்கையின் 3.2.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 4,497,673 மேலதிகக் கொடுப்பனவு செயற்திட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்களாக வழங்கப்பட்டிருந்த அதேநேரம் ரூபா 915,006 தொகை சம்பளங்களாக மற்றும் படிகளாக முறையான அங்கீகாரம் இல்லாமல் பயிற்சியாளர்கள் அல்லது அமைய அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். | இது தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியை பெறுவதற்கு அவசியமின்மை |

## 2. நிதிசார் மீளாய்வு

---------------------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

-------------------------------------------

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 04 மூலதன விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 301 மில்லியன் தொகையான தேறிய நிதிஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் அத்தகைய 04 செலவின | நிதிப்பிரமாணம் 50 இல் நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடுகள் மதிப்பீடுகளை தயாரிக்கையில் பின்பற்றப்பட வேண்டும். | செலவினங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு அதிகரித்தமையால் ஏற்பாடுகள் அந்த முறையில் சேமிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களில் 02 இற்காக மேற்கொள்ளப்பட்ட தேறிய நிதி ஏற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 04 மூலதன செலவின விடயங்களிலான சேமிப்புக்கள் 56 சதவீதத்திலிருந்து 95 சதவீத வீச்சிலிருந்த சேமிப்புக்கள் ரூபா 5.84 மில்லியனாகும். அதற்கு மேலதிகமாக, 08 மீண்டுவரும் செலவின விடயங்களிலுள்ள சேமிப்புக்கள் 25 சதவீதத்திலிருந்து 81 சதவீத வீச்சிலிருந்த சேமிப்புக்கள் ரூபா 423.611 மில்லியனாகும். | - மேற்படி - | - மேற்படி - |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 463.40 மில்லியன் கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை பொறுப்புக்கள் ஏற்படுத்தவில்லை. அத்தகைய பொறுப்புக்களை தீர்ப்பதற்கான போதியளவு ஏற்பாடானது 2018 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் சேமிக்கப்பட்டிருக்காமை காரணமாகவிருந்தது. | செலவினங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளை விஞ்சாமல் பொறுப்புக்கள் ஏற்படுத்த வேண்டும். | 2019 பெப்ரவரி 05 இற்கு முன்னர் பெறப்பட்ட ஏற்பாடுகளிற்கான போதியளவு சிட்டைகள் மாத்திரம் கணக்குகளில் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை அமுல்படுத்தலிலுள்ள காலதாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், ரூபா 1,000 மில்லியன் தொகை கொழும்பு புறநகர் புகையிரத செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 700 மில்லியன் தொகை அதிலிருந்து வீடுகளை நிர்மாணிக்கின்ற செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. 2018 சனவரியில் ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 2022 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும், விரிவான திட்டத்தின் 30 சதவீதம் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | திட்டவட்டமான வேலை தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் ஒரு தடவை ஏற்பாடு அனுமதிக்கப்பட்டதும் அதற்கான ஏற்பாடானது திட்டவட்ட காலநேரத்தினுள் அந்த வேலையை பூர்த்தி செய்வதன் மூலம் பயன்படுத்த வேண்டுமென்பதுடன் அதன் மூலம் பொதுமக்கள் எதிர்பார்த்த நன்மைகளை வழங்கல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் விரிவான திட்டமானது 30 சதவீதம் வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. |

## 3.2 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ரூபா 36,166 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடனான மாத்தறை - கதிர்காமம் புகையிரத செயற்திட்டம் 2013 ஆகஸ்ட் 01 இல் தொடங்கப்பட்டு 2016 யூலை 31 அளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டது. செயற்திட்டத்தை முறையாக அமுல்படுத்த ஒப்பந்தக்காரர் தவறியமையால் பூர்த்தியாக்கல் திகதி 2018 திசெம்பர் 31 வரையிலும் நீடிக்கப்பட்டிருந்ததுடன் அந்த திகதியில் ரூபா 33,730 மில்லியன் தொகை அல்லது ஒப்பந்தப் பெறுமதியின் 93 சதவீதம் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 4,306.98 மில்லியன் தொகை 32 கிலோமீற்றர் நீளத்திலுள்ள புகையிரத இணைப்பின் நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட இறுதியில் ஆலோசனை நிறுவனம் மொத்த நிர்மாண நீளம் தொடர்பான சான்றுகளை வழங்கியிருக்கவில்லை. | ஆவணச் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். | நோக்கெல்லையில் எதும் மாற்றம் ஏற்படுகின்ற போது ஒதுக்கப்பட்ட தொகை திருத்தப்படமாட்டாது. செயற்திட்டத்தை கையேற்பதற்கு முன்னர் நிர்மாணத்தின் மொத்த நீளம் தொடர்பில் ஆலோசனை நிறுவனத்திடமிருந்து சான்றிதழை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணங்களிலுள்ள புகையிரத இணைப்புக்களின் நீளமும் வேறுபடுகின்ற போது கிரய மதிப்பீடுகள் அதற்கிணங்க திருத்தப்பட்டு அதற்காக அனுமதி கொடுக்கப்படும் என்பதற்கான ஆவணப்படுத்தல் சரிபார்த்தலை கணக்காய்வு கொண்டிருக்கவில்லை. | | |
| (ii) | ஒப்பந்தத்தின் 7.4 ஆம் நிபந்தனையின் பிரகாரம், ஒப்பந்தக்காரர் புகையிரத தண்டவாளங்கள், ஸ்லீப்பர்ஸ் போன்றவற்றின் தரத்தை பரீட்சிக்க வேண்டுமென்பதுடன் இது தொடர்பில் பொறியியலாளர் தர உறுதிப்படுத்தல் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். எனினும், ரூபா 725.22 மில்லியன் கிரயத்தில் 2018 மார்ச் 31 இல் கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத தண்டவாளங்கள் மற்றும் ஸ்லீப்பர்ஸ் தொடர்பாக எந்தவொரு தர உறுதிப்படுத்தல் சான்றிதழ்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக,செயற்திட்டப் பிரிவு உள்ளே தண்டவாளங்களை பரீட்சிப்பதற்கும் அறிக்கையொன்றை வழங்குவதற்கும் தவறியது. | ஸ்லீப்பர்ஸ் மற்றும் புகையிரத தண்டவாளங்களின் தரம் தர உறுதிப்பாடு பரீட்சிப்புக்கள் ஊடாக சரிபார்க்கப்பட வேண்டும். | புகையிரத தண்டவாளங்கள் மற்றும் ஸ்லீப்பர்ஸ் இன் தரத்தை பரீட்சிப்பதற்கு செயற்திட்ட பொறியியலாளர் மற்றும் ஆலோசனை நிறுவனம் பரீட்சித்தலிற்காக உற்பத்தி செயன்முறையில் பங்கு எடுக்கிறது. இது தொடர்பில் நடாத்தப்பட்ட பரீட்சிப்புக்களின் அறிக்கையின் பிரதிகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | 32 கிலோமீற்றர் புகையிரத இணைப்பினை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட வேண்டிய புகையிரத தடங்கள் மற்றும் ஸ்லீப்பர்ஸ் | ஆலோசனை நிறுவனம் உள்ள போது குறித்த சேவை முறையாக பெறப்பட வேண்டும். | செயற்திட்ட ஆலோசனை நிறுவனமானது கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத தண்டவாளங்கள், பயன்படுத்திய தொகை மற்றும் மீதமாகவுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டிருக்க வேண்டும். அமைச்சின் ஆலோசனை நிறுவனமானது கொள்வனவு செய்யப்பட வேண்டிய புகையிரத தண்டவாளங்கள் பயன்படுத்திய இருப்புக்கள் மற்றும் மீதமாகவுள்ள இருப்புக்கள் போன்ற தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு தவறியிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத தண்டவாளங்களின் மீது எந்தவொரு இருப்பு கட்டுப்பாடும் இருக்கவில்லையென் அவதானிக்கப்பட்டது. | | இருப்பு தொடர்பில் அறிக்கைகளை தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் அறிவித்திருந்தது. |
| (iv) | மென் மணலை அகற்றுவதன் முலம் சதுப்பு நிலங்களில் நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்காக டிசீளம் குவித்தல் நடவடிக்கை எஸ்ஓபி ஊடாக (கொடுப்பனவு பட்டியல்) சிபாரிசு செய்யப்பட்டது. எனினும், இந்த முறைமை வெற்றிகரமற்றதாகவிருந்ததுடன் தொழில்நுட்பம், பாறை நிரப்புதல் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 2,732.17 மில்லியன் மற்றும் ரூபா 336.61 மில்லியன் என்பவற்றை உள்ளடக்கிய ரூபா 3,068.78 மில்லியன் தொகையானது பிரேரிக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 3,898.02 மில்லியனானது இது தொடர்பில் 51 ஆம் இலக்க சிட்டையினூடாக செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 829.24 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவொன்று அவதானிக்கப்படுகின்றது. ஒப்பந்த | ஒப்பந்த நிபந்தனைகளிற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. ஆலோசனை நிறுவனத்தின் முன்னைய அங்கீகாரமானது வேறுபாடுகள் மீது பெறப்பட்டிருக்க வேண்டும். | மென்மையான எல்லைச் சுத்தகரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த முறைமையாகும். பொறியியல் அடிப்படைகளாக முறைமையொன்றாகும். ஒரு உப நியமமொன்றல்ல. அதனால், கொடுப்பனவுகளானது ஒப்பந்த பௌதீக செய்முறைகள் கணக்கெடுப்பிற்கு பின்னர் சந்தர்ப்பவசமாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் 13.2 ஆம் இலக்க பொது நிபந்தனையின் பிரகாரம் மாற்ற முறைமையொன்றை பயன்படுத்தும் போது வாடிக்கையாளர்களிற்கு பெறுவதற்கு தகுதியுள்ள நன்மைகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (v) | பதிவுகளை பாதுகாப்பதற்காக, கைற்றோ சீடிங் யியோமற் (Hydro Seeding Geomat ) இன் அமுல்படுத்தலிற்கான வேலையில் பீ.5அ இன் கீழ் 51 ஆம் இலக்க சிட்டையினூடாக ரூபா 74.49 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், சொல்லப்பட்ட தொழில்நுட்பமானது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கு பதிலாக புல்தரை இடப்பட்டிருந்தது. புல்தரையிடல் முறைமை கூற்றின் பிரகாரம் தென்னை நிராகரிக்கப்படுவதுடன் எருமைப்புல்லினை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எனினும், மேற்கூறப்பட்ட முறைமையானது சிட்டை மற்றும் கொடுப்பனவு பட்டியலுடன் பொருத்தமற்றிருந்தது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. பிரேரிக்கப்பட்டதற்கு பதிலாக ஆகக்குறைந்த கிரய முறைமை பயன்படுத்துவதற்கு இது அனுமதிக்கப்பட்டது. ஆனால் | - மேற்படி - | மணல் மற்றும் அந்தப் பிரதேசத்தின் சரிவுகளை கருதுகின்ற போது அந்த செயற்திட்டத்திற்காக முறையை அங்கீகரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்தது. குறைந்த தரமுள்ளதாகவும், கிரய ஒப்பீடு அத்தியாவசியமற்றதாகவும் எந்த ஒரு சூழ்நிலையிலும் கருதியிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்திற்கு விலை நன்மையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | கடன் உடன்படிக்கையின் 1.3 ஆம் நிபந்தனையின் பிரகாரம், உடன்படிக்கை கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 4 வருடங்களிற்குள் கடன் பெறப்பட வேண்டும். உடன்படிக்கையானது 2013 ஏப்ரல் இல் கைச்சாத்திடப்பட்டிருந்த போதும், கடனானது 2017 ஏப்ரல் அளவில் முழுவதுமாக பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும், நிர்மாணங்களிலுள்ள காலதாமங்களால் ரூபா 5.35 மில்லியன் தொகையான வெளிநாட்டு நாணயமாற்று நட்டமொன்றும் 2017 மே இலிருந்து 2018 திசெம்பர் 31 இன் போது மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மீது ஏற்படுத்தப்பட்டது. | நிர்மாணங்களின் கால தாமதங்களால் வெளிநாடு நாணயமாற்றல் ஏற்பட்ட நட்டத்தின் அறவீட்டிலுள்ள வழிகள் தொடர்பிலான உடன் படிக்கையில் ஈடுபடுத்துவதற்கு முன்னர் சம்மதமானது அடையப் பட்டிருக்க வேண்டும். | செயற்திட்ட காலப்பகுதியினாது போது நீடிக்கப்பட்டமையால் காலதாமதத்திற்கான தண்டப்பணங்களை ஒப்பந்த உடன்படிக்கையின் விதிகளினுள் பதிவழிக்க முடிந்திருக்கவில்லை. |
| (vii) | புகையிரத இணைப்புக்கான நிர்மாணத்திற்கான தேவைப்பாடுகளை இனங்கண்டு பின்னர் காணிகளானது சுவீகரிக்கப்பட வேண்டும். எனினும், அத்தகைய முறையில் தேவைப்பாடுகளை இனங்காணாமல் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தது என்பதற்கான சந்தர்ப்பங்கள் பௌதீக பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. அதனால் | முறையான பௌதீக பரீட்சிப்பின் பின்னர் மாத்திரமே காணிகள் சுவீகரிக்கப்பட வேண்டும். | காணிகள் சுவீகரிக்கப்பட்ட போது, தேவைப்பாடுகளானது உரிமையாளர்களுக்கு சாதகமில்லாமல் கொள்வனவிற்கு முன்னர் காணிக்குழுக்களை ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் இனங்காணப்பட்டிருந்தது. |

டீகே 10+400, 9+800 மற்றும் 17 +750 இன் இடங்களிலுள்ள காணிகளானது தேவையற்றதாக எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாத்தறையிலிருந்து வெலியட்ட வரையிலான புகையிரத இணைப்பின் நிர்மாணம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சின்போது பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மாத்தறையிலிருந்து வெலியட்ட வரையிலான புகையிரத இணைப்புடனான தூண்கள் தொடர்பாக 07 பாலங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அத்தகைய பாலங்களை நிர்மாணிக்கும் போது அகற்றப்பட்ட மணலானது பொருத்த இடத்திற்கு அகற்றப்படாமல் பாலத்திற்கு அருகில் குவிக்கப்பட்டிருந்தது என பௌதீகப் பரீட்சிப்பில் அவதானிக்கப்பட்டது. அதிகமாக அகற்றப்பட்டமையால் மணலானது பாலத்தின் கீழ் மீதமாகவிருந்தமையல், நீரின் வடிகட்டலானது மழைக்காலங்களில் தடுக்கப்பட்டிருந்தமையால் இருந்தமையால் அனர்த்தத்திற்கான பிரச்சினையாக அவதானிக்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக, ஆலோசனை நிறுவனத்துடன் 712 பொது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதுடன் அதிலிருந்து 2018 ஒக்தோபர் 31 வரையிலும் | சூழல் விளைவுகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். | பொருத்தமான இடங்களை இனங்கண்டிருக்கையில் தூண்களின் நிர்மாணத்தின் போது அகற்றப்பட்ட மணலானது தற்போது அகற்றப்பட்டதுடன் செயற்திட்டமானது பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் அத்தகை வேலைகளை முழுமையாக பூர்த்தியாக்கும் வரை கையளிக்கப்பட்டிருக்கவில்லை. பெறப்பட்ட பொதுமக்கள் முறைப்பாடுகள் முழுமையாக கவனத்தில் கொள்ளப்படுவதுடன் செயற்திட்டமானது பூர்த்தியடைந்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். எனினும், பெறப்பட்ட முறைப்பாடுகள் கவனத்தில் எடுக்கப்படுவதுடன் தீர்வுகள் வழங்குவதற்கு ஒப்பந்தகாரருடன் நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்ட 181 முறைப்பாடுகள் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், மேற்குறிப்பிடப்பட்டவாறு மணலை அகற்றவும் பொதுமக்கள் முறைப்பாடுகளுக்கு தீர்வுகள் வழங்குவதற்கு தவறியிருந்தமையால், அதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 40.06 செலவின தொகையாது முழுமையாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) | ரூபா 13.46 மில்லியன் தொகை செலவழிப்பதன் மூலம் 9+423 இடத்திலுள்ள வடிகுழாய் பாலத்தின் இரு பக்க கால்வாயானது நீர் வழிந்தோடுவதற்கு இடமளிக்கும் வகையில் அபிவிருத்தி செய்திருக்கவில்லை. அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்றதாகவிருந்ததுடன், 2019 சனவரி 15 அளவில் இது தொடர்பில் ரூபா 11.47 மில்லியன் தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. | கால்வாய் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். | நீர் வடிந்தோடுவதற்கு அனுமதித்து கால்வாய் அபிவிருத்தி செய்வதற்கு ஒப்பந்தக்கார் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர். அதற்கிணங்க அத்தகைய வேலைகள் பூர்த்தி செய்யப்படும் |
| (iii) | உடன்படிக்கையின் 05 ஆம் நிபந்தனையின் பிரகாரம், இந்த செயற்திட்டமானது உள்நாட்டு பொருளாதாரத்திற்கு அதிகூடிய பெறுமதி சேர்க்கும் வகையில் அமுல்படுத்த வேண்டும். எனினும், செயற்திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்களின் அதிகூடிய | உள்நாட்டு பொருளாதாரத்திற்கு அதிகூடிய நன்மைகளை வழங்கும் வகையில் நடவடிக்கைகள் வழமை மாதிரி எடுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்கு தேவையான மூலப்பொருட்களை பெறும்போது, என்ன மூலப்பொருள் உள்நாட்டில் கொள்வனவு செய்ய முடியும் என எந்தவொரு வரையறைகளும் விதிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், ஒப்பந்தக்காரரை |

| | | |
|---|---|---|
| அளவு இறக்குமதி செய்யப்பட்டது என அவதானிக்கப்பட்டது. உள்நாட்டில் கொள்வனவு செய்திருக்கமுடியுமாகவிருந்த ஓடுகள், அலுமினிய உதிரிப்பாகங்கள் மற்றும் கூரை உதிரிப்பாகங்கள் போன்றவையும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. | | குறை சொல்ல முடியாது |

## 3.3 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் சேவையில் இல்லாமலிருந்த 11 உத்தியோகத்தரிடமிருந்து பெறவேண்டியிருந்த மொத்தக்கடன் மீதிகள் 2018 திசெமபர் 31 இல் உள்ளவாறு 1.25 மில்லியனாகவிருந்தது. அத்தகைய கடன் மீதிகளில், ரூபா 826,722 மீதியானது 05 வருடங்களிற்கு மேலாக தொடர்ச்சியாகவிருந்ததுடன் அந்த தொகையானது 66 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. 03 வருடங்களிற்கு மேலாக நிலுவையாகவுள்ள மீதிகளின் பெறுமதியானது 23 சதவீதத்தை சுட்டிக்காட்டி ரூபா 285,738 தொகையானவுள்ளது. அமைச்சானது அத்தகைய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு தவறியது. | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பந்தி 01 இல் நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், உத்தியோகத்தரின் மாற்றலின் பின்னர் 03 மாதங்கள் காலப்பகுதியினுள் கடன் மீதிகள் தீர்க்கப்படவேண்டும். அதற்கிணங்க அத்தகைய ஏற்பாடுகள் இணங்க வேண்டும். என்பதுடன் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் பந்தி 4 இன் பிரகாரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

## 4. நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வேலையொன்றின் செயலாற்றலை அளவிடுவதற்கு சரியான தரவுத்தளமொன்று இருத்தல் அவசியமாகவுள்ளது. எனினும், நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் நிறுவனமானது நிறுவகத்தின் அடைதல அளவிடுவதற்கு தரவுத்தளத்தை ஸ்தாபிப்பதற்கு நிறுவகமானது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான தரவுத் தளத்தை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 5. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 248 ஆக இருந்த அதேநேரம் உண்மையான ஊழியர்களின் 186 ஆக இருந்தமையால் அத்திகதியிலுள்ளவாறு 62 வெற்றிடங்கள் அவதானிக்கப்படுகின்றது. அதில் சிரேஷ்ட மட்ட பதவிகளில் 05 | அத்தியாவசிய பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் நிலவியது. நிறுவகத்தின் தூரநோக்கு மற்றும் இலட்சிய நோக்கு அடைதலிலுள்ள முக்கிய பங்கு வகிக்கின்ற சிரேஷ்ட மட்ட பதவிகளிலுள்ள பற்றாக்குறை அதிகரிப்பதால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் அமைச்சின் செய்முறை மீது விளைவொன்றை ஏற்படுத்துமென அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | அமைச்சானது 2017 பெப்ரவரி 15 இலிருந்து 2018 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அபிவிருத்தி உதவி பதவியில் வேலைக்கமர்த்துவதற்கு 03 அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தற்காலிக அடிப்படையில் விடுவித்திருந்தது. அவர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக அமைச்சால் ரூபா 1,625,236 கிரயமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. | சம்பளங்கள் மற்றும் படிகளை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியானது மோட்டார் கார் போக்குவரத்து திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்காமையால், சொல்லப்பட்ட உத்தியோகத்தர்கள் அந்த திணைக்களத்திற்கு நிரந்தரமாக இணைக்கப்பட முடியாது. |
| (இ) | புகையிரத திணைக்களத்திலிருந்து 31 ஊழியர்களையும் இலங்கை போக்குவரத்து சபையிடமிருந்து 08 ஊழியர்களையும் உள்ளடக்கி 39 ஊழியர்கள் சேவை பெற்றிருந்தனர். அமைச்சின் கீழ் இயங்குகின்ற நிறுவகங்களில் வெற்றிடங்கள் | ஆட்சேர்ப்புக்கள் வெற்றிட பதவிகளுக்கு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் உரிய உத்தியோகத்தர்கள் உரிய நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட வேண்டும். | வெற்றிட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவர்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இருந்த போதும், அத்தகைய நிறுவனங்களிடமிருந்து அமைச்சானது சேவையை பெற்றிருந்தமையால் அத்தகைய நிறுவனங்களின் சுமூகமான செயற்பாடானது பாதிக்கப்பட்டிருக்கும் என அவதானிக்கப்பட்டது.